**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.80/2022**

**<u>தேதி : 07.12.2023</u>**

**<u>(வா.சா.–1) – திருமதி. ஈஸ்வரி</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, 2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>**

**<u>குறுக்கு விசாரணை : (2-ம் பிரதிவாதி தரப்பில்)</u>**

சின்னச்சாமிகவுண்டருக்கு தெய்வாத்தாள், குப்பாத்தாள் என இரண்டு மனைவிகளா என்றால் சரிதான். அதில் தெய்வாத்தாளின் மகள் தான் 2–ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் தெய்வாத்தாளின் மற்றொரு மகள் காளியத்தாளின் மகள் என்றால் சரிதான். தெய்வாத்தாளும், குப்பாத்தாளும் உடன்பிறந்த சகோதரிகளா என்றால் சரிதான். பவுனாத்தாள், தெய்வாத்தாளின் 3–வது மகள் என்றால் சரிதான். வழக்குச் சொத்தில் எனது தாயார் காளியத்தாளுக்கு 4–ல் 1 பாகமும், காளியத்தாளின் உடன்பிறந்த சகோதரிகள் பொன்னாத்தாள், பவுனாத்தாள் மற்றும் கருப்புச்சாமிக்கு தலா 4–ல் 1 பாகமும் உள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்து சின்னச்சாமிகவுண்டருக்கு சுயார்ஜிதமாகவும், பிதுராஜ்ஜிதமாகவும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். சின்னச்சாமிகவுண்டரும், அவருடைய நான்கு மக்களும் ஒன்றாக இருந்து ஒரே குடும்பமாக இருந்து தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். சின்னச்சாமிகவுண்டர் இறப்பிற்கு பிறகு பொன்னாத்தாள், பவுனாத்தாள், கருப்புச்சாமி மற்றும் நானும் சேர்ந்து தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பவுனாத்தாளுக்குரிய 4–ல் 1 பாகத்தை பிரித்துக்கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னால் சரிதான். சின்னச்சாமிகவுண்டர் பெயரில் கருப்புச்சாமி போர்ஜரியாக ஒரு உயில் தயார் செய்துள்ளார் என்பது என் தரப்பு வழக்கு. மேற்படி போர்ஜரி உயில் ஆவணத்தை பயன்படுத்தி தான் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் உள்ளடக்கி கருப்புச்சாமி பாகவிஸ்தி உட்பட பல்வேறு வில்லங்க விற்பனை ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரிதான். பவுனாத்தாள் அவரது தரப்பு நீதிமன்ற கட்டணத்தை செலுத்தி பாகம் பிரித்துக்கொள்ள தயாராக உள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2023.12.21 19:26:00 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி.